**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-19 No. 01 January-March 2025**

# பழந்தமிழர் மரபில் குலக்குறியியல்

**ஏ. ராஜ்மோகன்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தனலட்சுமி சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

மாமல்லபுரம், சென்னை - 104.

**ABSTRACT**

In the tradition of the Tamil community, the oral tradition was gradually eroded and the king-pulaw tradition was created. Various cultural symbols have been preserved in the Dhianikudi tradition, which is spoken as such an oral tradition and a poet's creation tradition. Among them, as identified in this article, in the weaving culture of Thanikudi people, tribal symbols (plants, animals, birds) are integrated in their lives at various levels. Among them are belief, ritual, art, name symbols, rituals, combined with multifaceted nature. The best part of this study is to know them.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்ச் சமுக மரபில் வாய்மொழி மரபு கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து அரசர் - புலவர் மரபு உருவாக்கம் பெற்றது. இவ்வாறான வாய்மொழி மரபு, புலவர் உருவாக்கமரபு ஆகிய நிலையில் பேசப்படுகிற திணைக்குடி மரபில் பல்வேறு பண்பாட்டு அடையாளங்கள் பேணப்பட்டன. அவற்றில் தனித்து இந்த கட்டுரையில் அடையாளங்கொள்ளும் வகையில் நெய்தல் திணைக்குடி மக்கள் பண்பாட்டில் பல்வேறு நிலையில் குலக்கறி சார்ந்த அடையாளங்கள் (தாவரங்கள், விலங்குள், பறவைகள்) அவர்களின் வாழ்வில் ஒன்றிணைந்து உள்ளது. அவற்றில் நம்பிக்கை, சடங்கு, கலை, பெயர் அடையாளங்கள், விலகள் முறை, வழிபாட்டுமுறை என பன்முகத் தன்மையுடன் இணைந்தே காணப்படுகின்றன. அவற்றினை அறிந்துக்கொள்ளுவதே இந்த ஆய்வின் சிறப்பாகும்.

**முன்னுரை**

தமிழ்நாட்டில் பல்வேறு பழங்குடி மக்கள் வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கென்று சில அடையாளங்கள் இருப்பதையும் பல்வேறு தொல்லியல், மானிடவியல் ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன. பழங்குடி மக்களுக்குத் தனித்த அடையாளங்களாக விளங்கக் கூடியவை மொழி, பண்பாடு போன்றவை தான். அவை அவ்வினத்தின் அடிப்படைப் பண்புகளாக விளங்குகின்றன. பழங்குடி மக்களைப் பற்றியும் அவர்களது பண்பாடு மற்றும் சமுக அடையாளங்களைப் பற்றியெல்லாம் எத்தனையோ ஆய்வுகள் வந்த போதிலும் தொல்குடிகள் பற்றி இன்னும் ஏராளமான ஆய்வுகள் செய்வதற்கு இடம் உண்டு. பொதுவாகப் பழங்குடி மக்களின் இனம், பண்பாடு பற்றிய ஆய்வுகள் ஒருபுறம் நடந்தாலும் பழங்குடி மக்களின் குலக்குறிகள் பற்றிய ஆய்வுகள் தற்பொழுது உலகெங்கிலும் நடந்து வருகின்றன. குலக்குறி என்பது பண்பாடு மற்றும் சமூகம் இவற்றுடன் எவ்வாறு இணைத்துள்ளது என்று ஆய்ந்து நோக்கும் போதுதான், ஓர் இனத்தின் முழுமையானத் தோற்றத்தையும் பண்பாட்டு மரபுகளையும் அறிய முடியும்.

அதன் காரணமாகவே தொல்குடி மக்களைப் பற்றியும் அவர்களது குலக்குறிகள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டிய சூழல் இன்றைய தேவையாக உள்ளது. அதன் முதன்மையான காரணம் இன்று பழங்குடி மக்களுள் சிலர் தங்களது அடையாளங்களை இழந்து கொண்டும் சிலர் இன்றும் கடைப்பிடித்துக் கொண்டும் வருகின்றனர். அதுபோல தமிழகத்தில் தொன்று தொற்று வாழ்ந்து வரும் தொல்குடிகளிடையே (பழங்குடிகள்) பல சமுகக் குழுக்கள் காணப்படுகின்றன. அத்தகைய சமுக குழுக்களின் குலக்குறிகள் எவ்வாறு அவர்களின் வாழ்வில் ஒன்றிணைந்துள்ளது என்பதை சங்க இலக்கியப் பாடல்களின் தரவுகளின் கொண்டு நெய்தல் திணை குடி மக்களின் பண்பாட்டில் குலக்குறி எவ்வாறு இணைந்துள்ளது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குலக்குறி**

மனிதனுக்கும் இயற்கைக்கும் உறவுப்பிணைப்பைக் காட்டும் அடையாளங்களாகத் திகழ்பவையே குலக்குறிகள். ஒவ்வொரு குலத்தவரும் ஒரு குறிப்பிட்ட இயற்கைப் பொருளிலிருந்து தங்கள் தோன்றியதாக நம்பினர். அப்பொருளைத் தம்குலத்தின் குறியீடாகக் கொண்டு வழிபட்டனர். அதனால் அதனைக் குலக்குறி என்று அழைத்தனர். இது குறித்து மானிடவியலார் பல்வேறு கருத்துகளைக் குறிப்பிடுகின்றனர். அறிஞர்கள், குலக்குறி என்னும் ஆங்கிலச் சொல்லுக்குக் காரணமான மூலமொழிச் சொல், முதலில் எவ்வாறு எழுதப்பட்டது என்பதை அறிய முடியவில்லை என்கின்றனர். “சிலர் totam என்றும். வேறு சிலர் toodaim அல்லது dodaim அல்லது ododam என்றும் எழுதுகின்றனர். அதன் சரியான பொருளைக் கூட அறியமுடியவில்லை. இது குறித்து கருத்துரைக்கும் எமில் தர்க்கைம் முதன் முதலில் Ojibway இனக்குழுச் சமூகம் பற்றி ஆராய்ந்த ஜே.லாங் (J.Long) என்பவர் தந்த குறிப்புக்களின் படி totam என்பது பாதுகாக்கும் கடவுளைக் குறித்து வழங்கியது. பாதுகாக்கும் கடவுள் என்பது தனிமனிதக் குலக்குறியைக் குறிக்கிறது.மேலும் இது குலத்தின் குலக்குறியையும் குறிக்கிறது ( தி.சுப்பிரமனியன் :142:2011) என்று குறிப்பிடுகிறார்.

குலக்குறி என்பது விலங்கையோ பறவையோ பொருளையோ தங்கள் குலமுழுமைக்கும் வழிகாட்டியாக அல்லது வணக்கத்திற்குரியதாக அல்லது மூதாதையர்களைக் காண்பது என்ற வழக்கத்தைக் குறிக்கும் என மு. கல்லியாணிகுமார் (குலக்குறி வழிபாடு: தமிழியல் ஆய்வுத் தொகுப்பு: என். சி.பி. எச்:1996) குறிப்பிடுகின்றார். மேலும் தோழமை உணர்வுடன் உறவு பாராட்டப்படுகிற ஓர் இனக்குழுவினைச் சுட்டும் உயிருள்ள அல்லது உயிரற்றப் பொருளே அவ்வினக்குழுவின் குலக்குறி அடையாளம் என்பார் ஆ. தனஞ்செயன் (நாட்டுப்பு சமயம் தோற்றம் வளர்ச்சியும்: ப.26) மேலும் அவர் ஒரு குலம்

அல்லது இனக்குழு தன் வழிபாட்டுக்கு என எடுத்துக்கொள்ளும் விலங்கு, பறவை, தாவரம் போன்ற குறியீடுகளே குலக்குறி எனப்படும். இந்திய பழங்குடிகள் பலருக்கு எலி குலக்குறியாக இருந்துள்ளது எனவும் குறிப்பிடுகின்றார்.

எமில் தர்க்கைம் என்பவர் குலக்குறி என்பது ஒரு குறியீடு. அது ஏதோ ஒன்றை பற்றிய பருண்மையான வெளிப்பாடாகும் ஆதிமனிதனைப் பற்றிய வெளிப்பாடு. குலக்குறி என்பது குலக்குறி அல்லது கடவுள் என்று நாம் குறிப்பிட்டிருக்கும் ஒன்றின் புறவயமானதும் காட்சிக்குறியதுமான வடிவமாகும். அத்துடன் அல்லாமல் குலக்குறி, குலம் எனப்படும் உறுதிமிக்க சமூகத்தின் குறியீடாகவும் திகழ்கிறது. அதுவே அந்த சமூகத்தின் கொடி, அதுவே சமூகத்தின் அடையாளம் அந்தச் அடையாளத்தைக் கொண்டு ஒவ்வொரு குலமும் மற்றவற்றில் இருந்து தன்னைப் பிரித்து அடையாளப்படுத்திக் கொள்கிறது. (தனஞ்செயன்: குலக்குறியியலும் மீனவர் வழக்காறும். ப:142:2012) என்று கூறுகின்றார். இக்கூற்று ஒரு இனக்குழு மக்களின் அடையாளத்தை அவர்களின் குலக்குறி மூலம் இனம்கண்டு கொள்வதற்கு குறியீடு உறுதுணையாக இருப்பதைக் காட்டுகின்றது .

குலக்குறிகள் இனக்குழுச் சமுதாயத்தின் ஓரியல்பாகக் கருதப்பட்டது. தனி மனிதனுக்கும் அல்லது ஒரு குழுவுக்கும் அல்லது ஒரு குலத்திற்கும் ஒரு குறிப்பிட்ட இயற்கைப் பொருளுடன் ஒருவகை உறவுமுறை இருப்பதாக நம்பப்பட்டது. அப்பொருள் ஒரு குலத்தவருக்குக் குலக்குறியாகவும் அமைந்து. அக்குலத்திற்குக் குறியீடாகவும் பயன்படுத்தப்படும். மனிதனுக்கிருப்பது போல் இயற்கை உயிரிகளுக்கும் ஓர் 'ஆன்மா" இருப்பதாகக் கருதுவதும் அதன் அடிப்படை எனலாம். "ஒரு கூட்டத்தினரின் சமூக மனநிலையின் ஒன்றுபட்ட வெளிப்பாடாக அமையப்பெற்றதே குலக்குறி" என்றும் "இயற்கைச் சூழலுடன் இரத்த உறவு உடைய கூட்டத்தினர் உள்ளார்ந்த மனநிலையில் கொள்ளும் உறவே குலக்குறி என்கிறார் சிக்மண்டுபிராய்டு (க. இந்திரசித்து: நாட்டுப்புற நாகரிகமும் பண்பாடும்:ப:149:1998) .

குலக்குறி அடையாம் அல்லது குலமரபுச் சின்னம் என்பது குறி அல்லது அடையாளத்தைக் குறிக்கும். ஓர் இனத்தைப் பாதுகாக்கிற ஆவி வாழ்வதாக நம்பப்படுகிற மிருகம் அல்லது தாவரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற சின்னமாக இக்குலக்குறி பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு குலமும் ஒவ்வொரு வகையான விலங்கோடு அல்லது தாவரத்தோடு அல்லது அந்த வகைகளின் குழுவோடு தொடர்பு

கொண்டிருந்தது. அந்த விலங்கு அல்லது தாவரம் அந்தக் குலமரபின் சின்னமாகக் கருதப்பட்டது.

**நெய்தல்திணைக் குடி மரபில் குலக்குறிகள்**

நெய்தல் என்பது கடல் சார்ந்த நிலங்களும் கடலோரப் பகுதியாகும். இப்பகுதிகள் பெரும்பாலும் மணற்பாங்கானவை. அதனால், இப்பகுதியை பெருமணல் உலகம்' எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது. மிகப்பெரிய நீண்ட கடற்கரையைப் பண்டைத் தமிழகம் பெற்றிருந்தது. இதைச் சார்ந்த நிலப்பகுதிக்கு 'நெய்தல்' என்னும் மலரால் பெயர் பெற்றுள்ளது. அதேப்போல் நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த இடத்தையும் வருணன் தெய்வமாகவும் சேர்ப்பன், புலம்பன், பரதர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர், அளவர், அளத்தியர் ஆகியோர் மக்களாகவும் கடற்காக்கை, முதலிய பறவைகளும், சுறவம் போன்ற விலங்குகளும் பாக்கம், பட்டினம் ஊர்களும் உவர்நீர்க்கேணி, உவர்நீர் நீர்நிலைகளும் நெய்தல், கைதை, முண்டகம், அடம்பு, மலர்களும் கண்டல், புன்னை, ஞாழல், மரங்களும் மீன், கருவாடு, உப்பு, முதலான உணவுப் பொருட்களும் கோட்பறை, நாவாய்ப்பம்பை, விளரியாழ், செவ்வரியாழ், முதலான இசைக்கருவிகளும் மீன், உப்பெடுத்தல் போன்ற தொழில்களும் ஆகும். நெய்தல் திணைக்குடி மக்களின் வாழ்வியல் சார்ந்த பதிவுகள் சங்க இலக்கியங்களில் அதிகம் காணப்படுகின்றன.

**சிற்றூர், பேரூர் சார்ந்த குலக்குறிகள்**

ஊர்பெயர்கள் முன்பும் பின்பும் தன் குலக்குறிப் பெயரை இணைத்தே கூறும் மரபு குலமாந்தர்களிடையை காணமுடிகிறது. அவற்றினை சங்க இலக்கிய அகமாந்தர்கள் வாழிடங்கள் சிற்றூர், பேரூர், பாக்கம், கழிமுகப் பகுதி, என அவர்களின் வாழ்வியலுக்கு ஏற்ற வாழிடங்கள் சுற்றி அவர்களுக்குரிய கருப்பொருட்கள் அமைந்துள்ளன அவற்றினை. நெய்தல் நிலம்பற்றி குறிப்பிடும் போது நெய்தல் நிகர்க்கும், ஊரன் நட்புச், (ஐங்.2) நீலமணி போன்ற நிறமுடைய நெய்தல், ஆம்பலொடு மிக வளரும், ஊரனுடைய மகளாகிய தலைவி, பழன ஊரன், (ஐங்.96) என குறிப்பிடுகின்றன. நெய்தல் நிலத் தினைக் கூறும் இடங்களில், தலைவனது ஊரைச் சிறப்பித்துக் கூறும் இடங்களில், ஊர் வளமையினை எடுத்துரைக்கும் இடங்களில் அவர்களின் குலக்குறியான நெய்தல் மலர் இடம்பெற்றுள்ளதை காணமுடிகிறது. அகமாந்தர்களோடு சிற்றூர்களை இணைத்து கூறுவதுபோல அவர்களின் வாழ்விடங்களுள் ஒன்றான பேரூர்களையும் இணைத்துக் குறிப்பிடும் பதிவுகள் காணப்படுகின்றன. சான்றாக நற்றிணையிலுள்ள நெய்தல் திணைப்பாடல் ஒன்றில்

**“நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்,**
**கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே” (நற்றி.45)**

எனக் காணப்படுவதையும் நற்றிணையிலுள்ள மற்றொரு நெய்தல் திணைப்பாடல் ஒன்றில் பேர் ஊர் துஞ்சும் / எகினம் நடுங்கும் நல்நகர்ப் பயில் படை எனக் காணப்படுவதைமயும் சான்றாகக் குறிப்பிடலாம். மேற்கூறியவற்றில் பேரூர், நியம மூதூர், நல்நகர் என வரும் பெயர்கள் அகமாந்தர்களின் வாழ்விடங்களாகும். இவ்வாழ்விடங்களைக் குறிப்பிடும் பாடல்களில் அகமாந்தர்களின் குலக்குறி அடையாளங்களை இணைத்தே கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**குலக்குறியும் நம்பிக்கையும்**

குல மாந்தர்களிடையே பல்வேறு நம்பிக்கைகள் காணலாம். ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் நல்ல நாளும், பொழுதும், நன்னிமித்தமும் பார்த்துத் தொடங்குவது தமிழ் மக்களிடம் தொன்றுதொட்டு இருந்துவரும் ஒரு வழக்கமாகும். அணங்கு என்னும் தெய்வம் உறையும் கடல்நீரில் பாய்ந்த உப்புவயல்களில் வெம்மையால் காய்ந்த வெண்கடல் அமிர்தமான உப்பை மேற்குப் பகுதிக்குக் கொண்டு செல்வர். அவ்வாறு செல்லும் முன் பறவையை மையமாகக் கொண்டு நன்நிமித்தம் பார்த்ததை

***அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்***
***உணங்கு திறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்***
***குடபுல மருங்கின் உய்ம்மார் புள் ஓர்த்து" (அகம்.207)***

அகநானூறுப் பாடல்வரிகளில் குறிப்பிடுகிறது. இன்றும் எந்த வேலையினை தொடங்கிய முன்பு குல தெய்வத்தை வழிபட்டு செல்வது வழக்கமாக இருப்பதை காணலாம்.

**ஒப்பணை கலையில் குலக்குறிகள்**

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்வியல் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளில் ஒப்பணைக்கு முதன்மை கொடுத்துள்ளனர். அவர்களின் வாழ்வில் ஒப்பணை பல்வேறு சூழலில் பல்வேறு வகையில் வெளிப்பட்டுள்ளதை சங்க இலக்கிய அகப்பாடல்கள் நமக்கு காட்டுகின்றன. ஒப்பணைச் செய்துகொள்ள பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என அனைவரும் ஆர்வம் காட்டியுள்ளனர். இவ்வொப்பணையில் அணிகலன் சார்ந்தும், மலர் சார்ந்தும், வண்ணம் சார்ந்தும் (ஓவியம்) சார்ந்தும் வெளிப்பட்டுள்ளன. இவைப் பண்பாடின் குறியீடாகவும் வளமை சார்ந்த சடங்கு பொருளாகவும் இருந்துள்ளன. மேலும் அந்ததந்த திணை சார்ந்த இனக்குழு மக்களின் குலக்குறி அடையாளமாகவும்

விளங்கின. அணிகலன் சாந்த ஒப்பணையில் சங்க மகளிர் முதன்மை தந்து வாழ்ந்து வந்துள்ளனர். "பண்டைத் தமிழகத்துப் பெண்கள் ஆடைகளினால் முழுவதும் மறைக்கப் பெறாத உடலை அணிகலன் பூண்டு மறைத்தனர். (கே.கே.பிள்ளை தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் ப.178) என்று கே.கே.பிள்ளை கூறுவது ஒப்பு நோக்கத்தக்கது. மேலும் சங்ககால பெண்கள் அணிகளன்களை கழுத்தணிகள், கையணிகள், காதணிகள், கால் அணிகள் போன்ற முறையில் குலக்குறிச் சின்னங்களாக அணிந்துள்ளனர்.

அவற்றினை சுறாமீனைப் போன்றும் தேரையின் வாய்போன்றும் இதயத்தைப் போன்றும் இலச்சினைகள் பொருத்தப்பட்ட மோதிரங்களையும் இடையில் மணியும் பவழமும் கோர்த்த அரைஞாணையும் காலில் மணிகள் உள்ள சதங்கைகள். பொன் இரட்டைச் சரிகளையும் (கலி.54,86) அணிந்தனர் என்று கலித்தொகைப் பாடல்கள் கூறுகின்றன. ஐங்குறுநூற்றுப் பாடலொன்று தோழி வற்புறுத்தியும், திருமணத்திற்கான ஏற்பாடுகளில் ஈடுபடாத தலைவன், தலைவிக்குத் தன் அன்பளிப்பாக வலம்புரி சங்கு வளையல்களைத் தோழியிடம் கொடுக்கின்றான் (ஐங்.192) எனப் பதிவுசெய்துள்ளது. நெடுநல்வாடையும் இதனை வலம்புரிச் சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையளோடு கடிகை நூல் என்னும் காப்பு நாண்' கட்டியிருந்தாள் "(நெடு.142) என்று கூறுகின்றது. இவ்வாறு சங்கு வளையல் அணிவது மங்கல மாகக் கருதப்பட்டது. அக்காலத்தில் கைம்பெண் தவிர சுமங்கலிப் பெண்கள் எல்லோரும் சங்கு வளைகளை அணிந்திருந்தார்கள். பரிசம் போடும் நிகழ்ச்சியிலும் திருமணத்தின்போதும் மணமகன் கொடுக்கும் அன்பளிப்புகளில் வளையல்கள், தனியான இடத்தைப் பெறுகின்றன. இன்றும் திருமணமான பெண்கருவுற்று மகப்பேறு காணும் நிலையில் வளைகாப்பு என்னும் நிகழ்ச்சி மிகச்சீரும் சிறப்புமாக நடந்தேறும். இந்நிகழ்ச்சி தமிழர் வாழ்வியற் சடங்குகளில் ஒப்பணை அடையாளக் குறியீடாக தலையாய இடத்தைப் பெறுகின்றன. இவ்வாறு வளையல்கள் திருமணத்தை உறுதி செய்யும் குறியீடாக அமைந்துள்ளன.

**குலக்குறியும் விலகல்முறையும்**

பண்டைய திணைக்குடி, மற்றும் இனக்குழு மக்கள் தம்தம் வாழ்வியலுக்கு பெரும் துணையாக விளங்கும் குலக்குறிப் பொருட்களை தம் அடையாளப் பொருளாக, வாழ்விடப்பொருளாக, உணவுப் பொருளாக, ஒப்பணைப் பொருளாக பயண்படுத்தியது போல சில சூழல்களில் அந்ததந்தக் குலக்குறிப் பொருட்களை விலக்கிவைக்கவும் செய்தனர். இது குறித்த செய்திகள் சங்க அகப்பாடல்களில் அதிகம் காணப்படுகின்றன. விலகல் என்பது தவிர்தல் அல்லது மறுத்தல் என்பதாகும். புன்னை மரத்தையும் தம் குலக்குறியாக நினைத்து விலக்குவதை சங்க அகப்பாடல்களில் காணப்படுகின்றன.

சான்றாக "புன்னை" மரம் தங்கை என உறவாவதால் அம்மரத்தின் அடியில் காதலன் அவளுடன் உறவாட வந்ததைத் தவிர்த்து தோழி தலைவனுக்குக் கூறுகிறாள். அதைப் (நற்றி.172) பாடல் வழி அறியலாம். இதேபோலவே சங்கப் பெண்கள் தம் கையில் அணியும் சங்கு வளையல்களை குலக்குறியாக நினைத்து சில சூழலில் அணிவதை தவிர்துள்ளனர். சான்றாக தலைவன் தலைவியைப் பிரிந்து இல் பரத்தையிடம் சென்று விடுகிறான். கொஞ்சநாளில் அங்கிருந்து விலகி சேரி பரத்தையரிடம் தொடர்பு கொள்கின்றான். இதனை அறிந்த இல்பரத்தை தன்னிடம் தலைவன் இருப்பதாய் தலைவி இன்னும் நினைந்து கொண்டிருப்பாள் எனக் கலங்கி கோபம் மேலிட தன் வளையல்களை உடைத்து எறிகிறாள். அதனை

*"காவிரி வைப்பின் போஞர் அன்ன, என்*
*செறிவளை உடைத்தலோ இலனே" (அகம். 186)*

என அகநானூறு குறிப்பிடுகின்றது. மேலும், குல மகளிர் அல்லாத பரத்தையர் தம்மை விரும்பும் ஆடவர் பிரிந்து வேறொருத்தியிடம் சென்று விட்டால் தம் வளையல்களை உடைத்துத் தாம் கொண்ட வெறுப்பினை வெளிக்காட்டுவர் இவ்வழக்கம் இருந்தமையை,

*"என்னொடு திரியேன் ஆயின் உடைகவன் /*
*நேரிறை முன்கை வீக்கிய வளையலே (அகம்.336)*

என அகநானூறு சான்று தருகின்றது. இவ்வாறு பெண்கள் கோபத்தில் வளையல்களை உடைத்து மனவுணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வாறு சங்கு வளையல் மகிழ்ச்சியின் அடையாளமாகவும் குலக்குறி அடையாளமாகவும் விளங்குவதால் மகிழ்ச்சியில்லாத போது அதை அணிவதைத் தவிர்க்கின்றனர். குலக்குறியான சங்கு, வளையல் மகிழ்ச்சி தரும் என்ற நம்பிக்கை இருந்ததாகவும் உணரலாம்.

**முடிவுரை**

சங்க பாடல்களில் பெயர் அடையாளங்களை குறிப்பிடும் இடங்களில் குலக்குறியின் பெயர்கள் தாவரங்கள் அதிகம் காணமுடிகிறது. அது தலைவன், தலைவியின் ஊர் வளமை உணர்த்தும் குறியீடாக இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கிய அகப்பாடல்கள் வழி சங்க காலத்தில் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் ஆகியோர் சங்கு வளை, மோதிரம், குழை, கிண்கினி, போன்ற ஒப்பணை சார்ந்த அணிகலண்களை அணியும் பழக்கம் இருந்துள்ளது. இவ்வணிகளன்கள் பெரும்பாலும் குழந்தைகளை தீயவையிடமிருந்து பாதுகாக்கவும் குறியீடாகவும் சுறாமின், வாளை, போன்ற வடிவ அணிகலனஙண்கள் அவற்றின் ஆற்றல் தமக்கு தரும் என்னும் நம்பிக்கையின் குறியீடாகவும் திருமண சடங்கு சார்ந்த குறியீடாகவும் விளங்கியுள்ளமையை அறியலாம். சங்கு வளையல் மகிழ்ச்சியின் அடையாளமாகவும், அவை

மகிழ்ச்சியில்லாத போது அதை அணிவதைத் தவிர்த்து உள்ளது, நெய்தல் நில மக்கள் குலக்குறியான சங்கு, வளையல் மகிழ்ச்சி தரும் என்ற நம்பிக்கை இருந்ததாகவும் உணரலாம்.

**பார்வை நூல்கள்**

1. மு. கல்லியாணிகுமார் - குலக்குறி வழிபாடு: தமிழியல் ஆய்வுத் தொகுப்பு: என். சி.பி.எச்:1996.
2. தனஞ்செயன்: குலக்குறியியலும் மீனவர் வழக்காறும். என். சி.பி.எச் நிறுவனம். சென்னை. அம்பத்தூர். 2012.
3. க. இந்திரசித்து - நாட்டுப்புற நாகரிகமும் பண்பாடும். என். சி.பி.எச் நிறுவனம். சென்னை. அம்பத்தூர்.1998.
4. கே.கே.பிள்ளை - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.